
நிதி சார் குறுங்கதைகள்
நான் வாழ வைப்பேன்
PUBLIC DOMAIN

நான் வாழ வைப்பேன்

குறுங்கதைகள்

இளைய வேந்தன்

ஆரா பிரஸ்

1

நான் வாழ வைப்பேன்

தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்திலுள்ள கொடுமுடி அருகே உள்ள கிராமம் ஆம்பல்.

இந்த கிராமத்தில் வெற்றிமணி, பூங்கோதை என இரு சிறுமிகள் வாழ்ந்து வந்தனர். இவர்களுக்கு பள்ளி செல்லும் நேரம் தவிர்த்து கிராமத்தில் உள்ளவர்களுக்கு ஏதேனும் சிறு உதவிகளை செய்து வந்தனர். அதற்கு அவர்கள் பழங்கள், மீன், சில சமயங்களில் சில்லறைக் காசுகளை பரிசாக கொடுப்பார்கள்.

வெற்றிமணி, பூங்கோதை இருவருமே தோழிகள், பள்ளியிலும் ஒன்றாக இருப்பார்கள். நேரம் கிடைக்கும்போதெல்லாம் ஏதாவது நல்ல விஷயங்களைச் செய்தனர்.

செம்மறி ஆடு மேய்க்கும் மணி மாமாவின் ஆடுகளுக்கு தழைகளைக் கொண்டு வந்து போடுவார்கள். மாலை வேளையில் மணி மாமா, அவர்களுக்கு காய்ச்சிய பாலை பெரிய குவளைகளில் கொண்டு வந்து கொடுப்பார். முகத்தில் வெள்ளை மீசை தெரியும்படி ஆர்வமாக குடிப்பார்கள். நன்கு காய்ச்சிய பாலின் மணம் யாவருக்குமே அதைக் குடிக்க ஆசையைத் தரும்தானே?

சோமநாதனின் பழக்கடையில் அழுகிய பழங்களை பிரித்து எடுத்து வைத்தனர். அதற்கு அவர் இரண்டு சாத்துக்குடிகளை பரிசாக கொடுத்தார்.

2

கிராமத்தில் சாவடி அருகே மாயவன் கோயில் அருகே பூக்கட்டி விற்கும் ஏஞ்சலா அக்காவுக்கு பூக்களைத் கோக்க உதவினார்கள், வெற்றிமணியும் பூங்கொடியும். அதற்கு பரிசாக அந்த அக்கா இரண்டு ரோஜாப்பூக்களை பரிசாக தலையில் வைத்தார்.

கிராமத்தில் உள்ள அஞ்சல் நிலையத்தில், அஞ்சல்காரர் அகமது மாமாவுகு கடிதங்களை ஊர் வாரியாக பிரித்துக் கொடுத்தனர். அதற்கு அவர் பரிசாக, ஆளுக்கு ஐந்து ரூபாய் என பத்து ரூபாயைக் கொடுத்தார். அதில் பூங்கொடி ஐந்து ரூபாய்க்கு முருகன் இனிப்பகத்தில் லட்டு, அதிரசம் வாங்கித் தின்றாள். வெற்றி மணி, இரண்டு ரூபாயை செலவழித்துவிட்டு மீதியை தனது பாக்கெட்டில் போட்டுக்கொண்டாள்.

3

பூங்கொடி வெற்றி மணியைக் கேட்டாள்.

"நீ ஏன் ரெண்டு ரூபாய்க்கு மட்டும் இனிப்பு வாங்குனே? வேற எதுவும் வாங்கலியா? நிறைய இனிப்பு இருந்துதே?"

"உனக்கு, இப்பத் தெரியாது. பின்னாடி தெரியும்" என்று குறும்பாக சிரித்தபடி பாவாடையை கையில் விரித்தபடி தன் ஒற்றை மாடி வீட்டுக்குள் ஓடி விட்டாள்.

பூங்கொடிக்கு ஒன்றும் புரியவில்லை. ம்ஹூம் என உதட்டைச் சுழித்தபடி லட்டை கடித்து உண்டாள்.

4

ஒருநாள் துரைசாமி ஐயா, இரண்டு மூன்று பால் கேன்களை தூக்க முடியாதபடி தூக்கி வந்தார். மாடுகளை மேய்த்து அதில் வரும் பாலை விற்றுத்தான் அவரது வாழ்க்கை ஓடியது.

பள்ளி விட்டு வந்த வெற்றிமணி அவரைப் பார்த்து, "ஐயா நாங்க உங்களுக்கு உதவி செய்யறோம்" என்றாள். உடன் பூங்கொடியும் இணைந்துகொண்டு பால் கேன்களை தூக்கினாள்.

வயல் வெளியில் நடந்து சென்றனர். தனியார் பால் கடைக்கு சென்று பால் ஊற்றிவிட்டு பணம் வாங்கி வருவது ஐயாவின் எண்ணம். மாடுகள் சில நோயுற்று இருந்தால். அதற்கு மருந்துகளை வாங்கவேண்டும்.

அவர்கள் நடந்துசெல்லும்போது, திடீரென சாலையில் சாரைப் பாம்பு ஒன்று அவர்களைக் கடந்து சென்றது. அதைப் பார்த்து "ஐயோ பாம்பு" என அலறிய பூங்கொடி கேனை தூக்கிப்போட்டுவிட்டு ஐயாவையும், தோழி வெற்றிமணியையும் தள்ளிக்கொண்டு விழுந்தாள்.

பொதுவாக சாரைப்பாம்பு மனிதர்களைக் கண்டால் வேகமாக ஓடிவிடும். அதை பூங்கொடி அறியவில்லை. அவளின் பயத்தால் கேன்களைப் போட்டுவிட்டு, பால் அனைத்தும் கீழே கொட்டிப்போனது.

துரைசாமி ஐயாவுக்கு உதவி செய்ய வந்த சிறுமிகளைத் திட்ட மனமில்லை. ஆனால், பால் கொட்டிப் போய்விட்டதே, இப்போது எப்படி நோய்வாய்ப்பட்ட மாடுகளுக்கு மருந்து வாங்குவது என திகைத்துப் போனார்.

அதைக் கவனித்த வெற்றிமணி, "ஐயா, எங்கிட்ட கொஞ்சம் காசு இருக்கு. அதை வாங்கிக்கிட்டு, அப்புறம் திருப்பிக் கொடுங்க" என்று பள்ளிப் பையில் இருந்து சேமிப்பு பணத்தை எடுத்துக் கொடுத்தாள்.

அதை துரைசாமி ஐயா வாங்க மறுத்தார்.

"ஐயா, வாங்கிக்குங்க. நீங்க பால் வித்த காசு வந்ததும் திருப்பிக்கொடுத்துடுங்க. இப்ப உங்களுக்கு பணம் தேவைதானே? மறுக்காதீங்க" என்று பணத்தை அவரது கையில் திணித்தாள்.

"நீ நல்லாயிருக்கோணும் கண்ணு" என வாழ்த்தினார்.

அதைப் பார்த்த பூங்கொடிக்கு நாம் ஏதாவது செய்திருக்க வேண்டும் என்று குற்றவுணர்வு மேலோங்கியது.

துரைசாமி ஐயா போனதும், பூங்கொடி வெற்றிமணியிடம் பேசினாள்.

"அன்னைக்கு நீ ஏன் பலகாரக் கடையில் முழுக் காசையும் செலவழிக்கலைன்னு இப்பத்தான் தெரிஞ்சுக்கிட்டேன். பணத்தை சேர்த்து வெச்சா, மத்தவங்களுக்கு நானும் உதவி பண்ணலாம்தானே?" என்றாள்.

"கண்டிப்பாடி, என் செல்லத்தோழி, புரிஞ்சுக்கிட்டியே" என வெற்றிமணி பூங்கொடியைக் கட்டிக்கொண்டு நடந்தாள்.

ஆக்கம் என்பது போல அழிவும் ஒரு சக்தி. ஒரு பொருளை உருவாக்குபவர்கள் பத்தில் நான்கு பேர் என்றால் அதை அழித்து உருக்குலைக்க ஆறுபேர் இருப்பார்கள். இயற்கையாகவே இப்படியான மனிதர்கள் உருவாகிறார்கள். இயற்கை சமநிலையைப் பேண வேண்டுமே?

இருந்தாலும் இப்படியான மனிதர்களின் உடனிருப்பவர்கள் நிறைய பாதிப்பையும் வெறுப்பையும் எதிர்கொள்ள நேரிடுகிறது.

அழிக்கப் பிறந்தவன்

ஆறுமுகம் சாலைப்புதூரில் இருந்து கொடுமுடி வந்தார். அவர், அங்குள்ள பொதுத்துறை வங்கியில் கணக்காளராகப் பணியாற்றினார். வேலை முடித்தபிறகு, ஆறரை மணிக்கு வேலன் கஃபேயில் டீயும் சுண்டலும் சாப்பிடுவது வழக்கம். இப்படித்தான் மூன்றாண்டுகளில் ஆறுமுகமும், கஃபயின் உரிமையாளர் குறிஞ்சி வேலனும் நட்பானார்கள்.

ஒருநாள் ஆறுமுகம் இறுக்கமான முகத்துடன் கடையில் உட்கார்ந்து டீ குடித்துக்கொண்டிருந்தார். அசாம் டீத்தூளால் போடப்பட்ட டீயை ரசித்துக் குடிப்பவர்,அன்று நிலையில்லாதபடி பார்த்துக்கொண்டிருந்தார். அதைப் பார்த்த குறிஞ்சி வேலன் வட இந்தியப் பையனை கல்லாவைப் பார்த்துக்கொள்ளக் கூறிவிட்டு ஆறுமுகம் பக்கம் வந்தார்.

"'என்னங்க சார், முகம் ஒரு மாதிரி இருக்கு, ஏதாவது பிரச்னையா?"

" எல்லாம் வீட்டுல இருக்கிற பையன் இளங்கோனாலதாங்க. எங்க போனாலும் பொருட்களை அடிச்சு துவம்சம் பண்ணி ஒடைச்சுப்புடுறான். சண்டைங்கிற பஞ்சாயத்தோட காசும் கொடுக்கிற மாதிரி ஆயிடுது"

"பையன் படிக்கிறவன்தானே, என்ன பண்ணான்? அவனைப் பார்த்திருக்கேனே, அப்படி ஏதும் தொந்தரவு பண்றவன் மாதிரி தெரியலையே?"

"இரண்டு வாரத்துக்கு முன்னாடி, பள்ளிக்கூடத்து பிரெண்ட் ஃபிரான்சிஸ் வீட்டுக்குப் போனான். அங்கே போய் விளையாட்டுங்குற பேர்ல, வீட்டு ஷோகேஸ், அலமாரி, திரைச்சீலை எல்லாத்தையும் ஒடைச்சு நாசம் பண்ணிட்டான். அவங்க அப்பா ஆண்டனி என்கிட்ட போன் பண்ணி அப்படி ஆத்திரத்தோட புலம்புறாரு. அவருகிட்ட மன்னிப்பு கேட்டு, சேதமான பொருட்களுக்கு ஆயிரம் ரூபா கொடுத்தேன். "

"'பையன் அப்படியா பண்ணுனான்?'

"'அவனை நினைச்சா, இப்பல்லாம் தூக்கமே வரமாட்டேங்குது. ஒருமுறை ராமநாதன்ங்கிற பிரெண்டு வீட்டுக்கு போயி, கங்கை ஆத்து தண்ணியை உன் வீட்டுக்குள்ள கொண்டு வர்றேன்னு சொல்லி மேலே இருந்த வாட்டர் டேங்க் தண்ணி முழுசையும் வீட்டுக்குள்ள நிரப்பி, பொருட்கள் எல்லாம் அதில மிதக்க விட்டுட்டான். அதுக்கும் தேவையில்லாத செலவு. இளங்கோ எதுக்கு இப்படி மாறினான்னு தெரியலை. இப்படியே போச்சுன்னா, இது எங்க போய் முடியுமோ, தெரியலை"

"பரவாயில்லைப்பா, சின்ன வயசுல இருக்கிறதுதான் சரியாயிடும்" என்று போண்டாவை தட்டில் எடுத்து வைத்துவிட்டு தக்காளி கெட்ச்சப்பை அருகில் எடுத்து வைத்தார் குறிஞ்சிவேலன். ஆற்றாமை குறையாமல் இரண்டு போண்டாக்களை எடுத்து தின்றார் ஆறுமுகம்.

சில நாட்களில் ஆறுமுகம், தன் தங்கை தமிழ்செல்வி வீடிருந்த சென்னைக்கு மகன் இளங்கோவை கூட்டிச்சென்றார். ஈரோடு பழைய பேருந்து நிலையம் சென்று, அங்கிருந்து சேலம் செல்லும் டிஎன்எஸ்டிசி அரசுப் பேருந்தைப் பிடித்து ஏறி, சேலம் மத்தியப் பேருந்து நிலையம் சென்றார். அங்கு நின்றிருந்த சென்னை கிளாம்பாக்கம் கலைஞர் பேருந்து முனையம் செல்லும் பேருந்தில் ஏறினார்.

ஆறுமுகத்திற்கு மகன் இளங்கோ, அத்தை வீட்டுக்குச் சென்றாலேனும் அழிக்கப் பிறந்தவன் என்ற குணத்தை சரிசெய்துகொள்வான் என்று நம்பினார். பயணத்தில், ஆறுமுகம் வாயைப் பிளந்தபடி சற்றே கண் அயர்ந்துவிட்டார். பேருந்து ஆத்தூர் நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. இருக்கையில் உட்கார்ந்திருந்த இளங்கோவிற்கு போரடிக்க, அவன் தனது இருக்கையைப் பார்த்தான். அதில் இருந்து பஞ்சு சற்று வெளியே வந்திருந்தது. அப்படியே அந்தப் பஞ்சை வெளியே இழுத்துப் பார்த்தால், எடையில்லாமல் இருந்தது இலவம் பஞ்சு. அதை ஆர்வமாக இழுத்து பந்து போல உருட்டத் தொடங்கினான்.

ஒரு இடத்தில் இருந்த துளையில் சிறியளவு பஞ்சுதான் வந்தது. பல்வேறு இடங்களில் அதேபோல கிழித்து எடுத்தால் வேகமாக பஞ்சை திரட்ட முடியும் என இளங்கோ அனுபவத்தில் புரிந்துகொண்டான். அவன் அப்படி கண் துஞ்சாது கடமையாற்றி பஞ்சை உருட்டிக்கொண்டிருந்தபோது, ஓட்டுநர் வேகத்தடையில் விட்டு தூக்கியதில் ஆகாயமார்க்கமாக பயணித்து

இருக்கை திரும்பிய ஆறுமுகத்திற்கு தலை மேற்கூரையில் பட்டு தூக்கம் கலைந்தது.

பையனைப் பார்த்தால், அவன் பஞ்சைத் திரட்டி ஹேண்ட்பால் அளவுக்கு உருட்டிக்கொண்டிருந்தான். அசோக் லைலேண்ட் பஸ்சின் இருக்கைக்கு என்ன இழப்பீடு கொடுப்பது என வெகுண்டார்.

"'அடேய் *****பயலே இளங்கோ, என்னடா பண்ணி வெச்சிருக்கிறே?"

ஆறுமுகத்தின் குரல் கேட்டு பயணிகள் எட்டிப் பார்த்தனர். நடத்துனர் பொன்னுத்துரை அங்கே வந்தார். பஞ்சு சீட்டிலிருந்து வந்து பறந்துகொண்டிருந்தது.

இளங்கோ, பெரிதாக பதற்றம் கொள்ளவில்லை.

"'அப்பா, இங்க பாருங்க பந்து பண்ணிருக்கேன்."
"அடேய் முட்டாள்பயலே உட்காற்ற சீட்டை கிழிச்சு வெச்சிட்டியே, இதுக்கு யாருடா தெண்டம் கட்டுறது?"

"நீங்கதான். இதுக்கு முன்னாடி நீங்க காசு கொடுத்திருக்கீங்கள்லே, அதே மாதிரிதான். "

"'அப்ப நீ போற இடத்துல பொருளை ஒடைப்பே, சீட்டை கிழிப்பே, நான் காசை எண்ணி வைக்கோணுமாடா, நாயே" என்று ஆறுமுகம் பொறுமை இழந்துவிட்டார்.

நடத்துநர் பொன்னுத்துரை ஆறுமுகத்தை பிடித்து ஆசுவாசப்படுத்தினார்.

பஸ், அசைவத்திலும் ஆரோக்கியம் என்ற உணவகத்தில் சென்று நின்றது.

நடத்துநர் பொன்னுத்துரை ஆறுமுகம் இளங்கோவைக் கூட்டிசென்று உணவகத்தில் அமர்ந்தார்.

" தம்பி, இளங்கோ இந்த பஸ், அரசு பஸ்சு. இதுல உன்னோட பணமும் இருக்கு. அதை நீயே சேதம் பண்ணலாமா?"

"'பஸ் எப்படி எனக்கு சொந்தமாகும்?'

"பஸ்சு போற ரோடு, பாலம், மேம்பாலம், குடிநீர், பேருந்து வசதி அப்படின்னு எல்லாமே அரசாங்கத்தோடதுதான். அரசோட நோக்கம் மக்களுக்கான சேவைதான். லாபம் கிடைக்கிறது பத்தியல்ல. ஆனா, அரசாங்கத்தோட சொத்துங்கிறது சேதமானா, அது வரி கட்டுற மக்களைப் பாதிக்கும்."

"'நான் வரி கட்டுறேனா?''

"'நீ வாங்குற அத்தனை பொருளிலும் வரி இருக்கு. அதைக் கட்டுறதாலதான் அரசாங்கம் நிறைய வசதிகளைச் செஞ்சு கொடுக்குது. வரி கட்டலைன்னா, வரி கட்டுறது குறைஞ்சிடுச்சுன்னா, அரசாங்கம் நிறைய வசதிகளை செஞ்சு கொடுக்க முடியாது. குறிப்பாக ரோடு போடமுடியாது. குடிநீர் வசதி தர முடியாது, மேம்பாலம், போக்குவரத்து நெரிசலை குறைக்க பேருந்து நிலையமெல்லாம் கட்ட முடியாது"

"ஓ அப்படியா?''

"நீ ஒடைக்கிற பொருளுக்கு உன்னோட அப்பா பணம் கொடுக்கிறார். ஆனா, பொதுச்சொத்தான பஸ்சை சேதப்படுத்துனா, அதுல மத்தவங்களோட வரிப்பணமும் இருக்கு. முக்கியமாக அரசாங்கத்தோட சேவையைப் பாதிக்குது. எப்பவுமே பொதுச்சொத்தை சேதப்படுத்துறது, நம்மோட பணத்தை நாமே அழிச்சுக்கிற மாதிரிதான்'' என்று நடத்துநர் பொன்னுதுரை விளக்கினார்.

"'இப்ப நீ செஞ்சதுக்கு உங்கப்பா பணம் கொடுத்துடுவார். ஆனா, அடுத்தமுறை நீ செஞ்ச தப்புக்கு உன் உழைப்புனால சம்பாதிச்ச காசைத்தான் கொடுக்கணும். புரியுதா? அப்பத்தான் வருமானம் பத்தி நீ புரிஞ்சுக்க முடியும்'' என்ற நடத்துநரை ஆறுமுகம் நன்றியோடு பார்த்தார்.

இளங்கோ தலைகுனிந்து கண்ணீர் சிந்தினான்.

நன்றி

திரு.கணியம் சீனிவாசன்
திரு.தண்டபாணி
திருமதி. அருணா
திருமதி.கீதா
திருமதி. ஜீவிதா